**<u>O.S.No.98/2012</u>**

<u>பி.வா.சா.2, திரு. ஆறுமுகம்</u>
நாள் : 13.08.2025 நேரம் : 12.25 PM

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1)எனக்கு சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கில் வாதிகள் தாக்கல்செய்துள்ள பிராதை பற்றியோ, பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பற்றியோ தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் சேது தேவர் மற்றும் இருளாயி ஆகியோர்களின் மொத்த சொத்துக்களும் சரியாக சேர்க்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழககின் வாதிகளும், பிரதிவாதிகளும் இளஞ்செம்பூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் இளஞ்செம்பூர் குரூப்பிலும், கண்டிலான் குரூப்பிலும் உள்ளது என்றால் சரிதான். நான் நெடுங்குளம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

2)எனது கிராமம் ஒருவானேந்தல் குரூப்பை சேர்ந்தது என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் இளஞ்செம்பூர் குரூப்பிலும், கண்டிலான் குரூப்பிலும் இல்லை என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஊரணி என்பது சேதுதேவர் காலத்திலேயே அரசுக்கு ஊரணியாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தை ஒரு தனிப்பட்ட நபர் மற்றும் வேறொரு நபருக்கு கிரையம் கொடுப்பது தவறு என்றால் சரிதான், ஆனால் தாவா சொத்துக்கள் 15 வருடங்களுக்கு முன்பு பாகம் பிரிக்கப்பட்ட பின்னர் தான் கிரையம் கொடுக்கப்பட்டது. மேற்படி பாகம் பிரிக்கப்பட்டது எனக்கு யார் சொன்னது என்றால் பஞ்சாயத்து அமைத்து பாகம் பிரிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும், ஆனால் நாள், தேதி நினைவு இல்லை.

3)நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி பஞ்சாயத்து ஏற்பட்டு பாகப்பிரிவினை நடைபெற்றதை குறிப்பிடவில்லை என்றால் நான்

சொல்லி தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது, நான் மேற்படி பஞ்சாயத்து ஏற்பட்டு பாகப்பிரிவினை நடைபெற்றதை எனது வழக்கறிஞரிடம் கூறினேன். நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை. தாவா சொத்துகளை பொறுத்து பாகப்பிரிவினை நடைபெற்ற ஆவணங்களை நான் படித்து பார்த்ததில்லை என்றால் சரிதான். தாவா சொத்துகள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதி கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4)எனது மனைவி பெயர் முருகேஸ்வரி என்றால் சரிதான். எனது மனைவி உடன் பிறந்தவர் சண்முகநாதன் என்றால் சரிதான். சண்முகநாதனின் மனைவி இந்த வழக்கின் 5ம் பிரதிவாதியான ரேகா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு குழந்தைகள் இல்லை என்றாலும், இந்த 5ம் பிரதிவாதியான ரேகாதான் வளர்ப்பு குழந்தையாக எடுத்து வளர்த்தார் என்றால் சரிதான். எனது மனைவிக்கு 5ம் பிரதிவாதியான ரேகா நாத்தனார் என்பதால் 1ம் பிரதிவாதி கேட்டு கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வாக்குமூலத்தில் கண்ட விசயங்கள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.40 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.08.13 15:03:31 +0530